# கண்டி இலக்கியச்செய்தி மடல் 3

ஆசிரியர்:- இரா. அ. இராமன் - துணை ஆசிரியர் இக்பால் அலி

மாத இதழ் 15.01.1997 அன்பளிப்பு ரூபா 10.00




## ஆண்டுதோறும் கொண்டாட்டங்கள்

-சொல்லின் செல்வி ரூபராணி ஜோசப்-

புத்தாண்டு மலர்ந்தது. அதை வரவேற்க எத்தனை ஏற்பாடுகள்? உலகம் பூராவும் உளம் மகிழ்வதும் வாழ்த்துவதும் கைகுலுக்குவதும் நாம் அறிந்த நிகழ்வுகளே. பட்டாசு கொழுத்தி எவ்வளவு சத்தியமாய் சந்தோஷத்தை விளம்பரம் செய்கின்றோம். புத்தாடை புனைந்து கோயில் வணக்கமும் செய்து பெற்றார் பெரியார் ஆசி பெற்று அண்டை அயலவர்களுடன் பகிர்ந்து உண்டு அன்றைய பொழுதை கழிக்கின்றோம்.

என்ன யோசிக்கிறீர்கள்? கொஞ்சம் சிந்தியுங்கள். சமயத்தலைவர்களும் அறிஞர்களும் அரசியல்வாதிகளும் நாடு வளம் பெற மக்கள் சுபீட்சமடைய வாழ்த்துகிறார்கள். உறுதி மொழிகளை வழங்குகிறார்கள். வருஷத்துக்கு வருஷம் பிறக்கும் கொண்டாட்டங்களில் இதையே கேட்கிறோம். எல்லாமே சம்பிரதாயமாகி விட்டதே தவிர உண்மையான சந்தோஷம், சுபீட்சம் நிம்மதி இல்லை என்றே சொல்ல வேண்டும்.

"மிகப் பலம் வாய்ந்த சக்தி அகிம்சை தான். அதன் முதல் நிபந்தனை வாழ்க்கையில் ஒவ்வொரு துறைகளிலும் எல்லாக் காரியங்களிலும் நீதிபதியாக நடப்பதே" என்றார் மகாத்மா. செயலிலே காட்ட முடியாத விஷயங்களைச் சொல்லிலே திரும்பத் திரும்ப அசைபோடும் பழக்கம் ஒழிய வேண்டும். நாடாழ்பவர்கள் மனங்களை வென்றாக வேண்டும் மனப்பாங்கும், நடத்தையுமே இதன் விளை நிலம்.

எந்த வகையில் பார்த்தாலும் ஆண்டுகள் மாறினாலும் மனங்கள் மாறவில்லையே! நல்ல மனங்கள் பெருகினால்......... தினமும் கொண்டாட்டங்கள் தான்.

இதோ......... மற்றொரு பொங்கலுக்காகக் காத்திருக்கிறோம். வாழ்த்துகளும் பாட்டுகளும் வழமையான சங்கதிகள்தான். மாக்கோலம் நிறைகுடம் குத்து விளக்கெரித்துச் சுபநேரம் பார்த்து சுவாமியை வணங்கிப் பொங்கி மகிழ்கிறோம். கதிரவனுக்குக் கைகூப்புகிறோம். மாட்டில் கூட அன்று அலாதியான அன்பு பிறக்கிறது. அதற்கும் ஒரு பொங்கல். உலகமே உழவின் பின்னால் என்று ஏட்டிலே உண்டு.

ஆனால் அதற்கு நாட்டிலே மதிப்பேது? வருடப்பிறப்புக்களும், நத்தாரும் பொங்கலும் கால ஒழுங்கின்படி வருவதும் போவதும் இயல்பு. நாம் மட்டும் இன்னும் ஏன் நின்ற இடத்தில் நின்று கொண்டிருக்கிறோம்? புதியதோர் உலகம் செய்ய இந்த நல்ல வேளைகளில் நகரவேண்டாமா?

போருக்கும் புயலுக்குமிடையில் கண்ணீர் பொங்குவதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? புகைய முடியாத அடுப்புக்கள்........பசியையும் பட்டினியையும் பிரசவிப்பதை நினைத்துப் பார்க்க வேண்டாமா? முகவரிகளை தொலைத்து விட்டு முள்வேலிகளுக்கப்பால், ஆடுமாடுகளாய் அடைபட்டுக்கிடக்கும் அகதிகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டாமா? லயத்துச் சிறைகளில் இருந்து வெளியேறத் துடிக்கும் பாட்டாளி மக்களுக்கு விடுதலை எப்போது வரும் என்று ஏங்க வேண்டாமா? அரிசிப் பொங்கலை விட நாடு முழுவதும் மகிழ்ச்சிப் பொங்கல் வரவேண்டும்.


**உயன்வத்தை றம்ஜானின்**

**ஓர் இதயம் அழுகிறது**

**(சிறுகதைத் தொகுதி)**

"சரித்திரம் தொடர்கிறது", "மலடி", "மஜிதா விதவையானால்", "ஓர் இதயம் அழுகிறது" போன்ற கதைகள் நம் சமூகத்தின் நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இவை பல ஆயிரக் கணக்கான ஆண்களின் தான்தோன்றித்தனமான செயல்களின் பிரதிபலிப்பாகும்."

– இலக்கியத்தாரகை நயிமா சித்திக் அவர்களின் முன்னுரையில் –

பக்கங்கள் – 60 விலை ரூபா 40.00

தபால் மூலம் பெற விரும்புபவர்களுக்கு தபால் செலவு இலவசம்

தொடர்புகளுக்கு

உயன்வத்தை றம்ஜான்
193, உயன்வத்தை,
தெவனகல.


பத்மா சோமகாந்தன்
ஆசிரியர் 'பெண்ணின்குரல்'
15 G 1/1, PARK ROAD
COLOMBO 5


மல்லிகைப்பந்தல்

உங்களுக்கு நன்கு தெரிந்த எழுத்தாளர் டொமினிக் ஜீவா இந்த மண்ணின் படைப்பாளிகளை நேசிக்கத் தெரிந்தவர். அவரது உழைப்பில் மலர்ந்தது மல்லிகை. அதன் இன்னொரு அமைப்பு மல்லிகைப் பந்தல், தரமான நூல்கள் அவரிடம் தயாராக உள்ளன. மல்லிகை ஜீவாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட 600 பக்கங்களைக் கொண்ட சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. அண்மையில் அதன் வெளியீட்டு விழா கொழும்பில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கலைஞர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

மல்லிகைப் பந்தல்
182, முதலாம் குறுக்குத் தெரு
கொழும்பு-11
தொ. பே. 01-439413



இது ஒரு மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி இலக்கியச்செய்தி மடல்

**நூறு மலர்கள் மலரட்டும்**
**நாறும் கீழ்மைகள் தகரட்டும்**

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
18/13, பூரணவத்தை
கண்டி

15. 01. 1997


### ஆசிரியர் உரை
### கொழும்பில் மலையகத்திற்கான "துரைவி" வெளியீட்டகம்

கண்டி இலக்கிய செய்தி மடல் வாசகர்களுக்கு
இனிய புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்
மலையகத்தில் தொடர்ந்து
தரமான இலக்கியப் படைப்புக்கள்
நூலுருப்பெற்று வெளிவருகின்றன.
மலையகத்தில் சில வெளியீட்டு நிறுவனங்கள்,
அரசுசார்பற்ற நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள்
நூல் வெளியீட்டுப் பணியினை
செய்து வருகின்றனர்.
மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும்
ரூபராணி ஜோசப்பின் ஏணியும் தோணியும்
இக்பால் அலியின் முற்றத்திற்கு வாருங்கள்
நூல்களை வெளியிட்டு
நூல் வெளியீட்டுப் பணியினை ஆரம்பித்துள்ளது.
கொழும்பில் வாழும் இலக்கிய ஆர்வலரும்,
மனித நேயம் மிக்கவரும்,
இலக்கியவாதிகளின் காவலரும்,
சிறந்த வாசகருமான
துரை விஸ்வநாதன் அவர்கள்
மலையகத்தில் வாழும்
எழுத்தாளர்களுடைய படைப்புக்களை
நூல் வடிவில் வெளிக்கொணர
"துரைவி" வெளியீட்டு நிறுவனத்தை
ஆரம்பித்துள்ளார்.
இச்செய்தி மலையகத்தில் வாழும்
எழுத்தாளர்களுக்கு இனிப்பான செய்திதான்.
மலையக இலக்கிய வளர்ச்சிக்கு,
ஒரு ஆரோக்கியமான நிகழ்வுதான்.
துரை விஸ்வநாதன் அவர்களுக்கு
ஒரு வேண்டுகோள்
மலையகத்தில் வாழும் சில எழுத்தாளர்கள்
தங்களது கையெழுத்துப் பிரதிகளை
வைத்துக் கொண்டு
இவை நூலுரு பெறாதா?
என ஏக்கத்தோடு இருப்பவர்களுக்கு
முன்னுரிமை அளிக்கும்படி
அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.
இவ்வெளியீட்டுப் பணிகளுக்குப் பின்னால்
இன்னுமொரு இலக்கிய மேதை
உள்ளார் என்பது மனங்கொளத்தக்கது.
அவர்தான் மல்லிகை ஜீவா.
இவர்களின் இப்பணி தொடர
வாழ்த்துகின்றோம்.
நூறு மலர்கள் மலரட்டும்.
என்றென்றும் அன்புடன்
உங்கள்
**இரா. அ. இராமன்**

## கண்டி இலக்கியக் களம்

### 48 கலை இலக்கியவாதிகளுக்கு விருது வழங்கி கௌரவிப்பு

சென்ற மாதம் கண்டி டி. எஸ். சேனாநாயக்க பொது? நூலகக் கேட்போர் கூடத்தில் மலையக கலை-கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள கலை இலக்கியவாதிகள் 48-பேர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பிரபல சிங்கள திரைப்பட நடிகரும், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநருமான கௌரவ காமினி பொன்சேக்கா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மூன்று இன கலைஞர்களையும், பொதுமக்களையும் ஒன்று கூட்டி நடாத்திய இவ்விழா ஒரு வித்தியாசமான ஒரு விழாதான். காமினி பொன்சேக்கா அவர்களின் உரை அனைவரையும் கவர்ந்தது வியப்பல்ல: இவ்விழா ஏற்பாட்டாளர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். இவ்வாண்டு நடைபெற உள்ள விழா கல்விமான்களை நடுவர்களாகக் கொண்ட குழுவின் மூலம் கலை இலக்கியத்திற்காக தங்களை அர்ப்பணித்தவர்கள், மறைந்து, மறைக்கப்பட்டு வாழுகின்றார்கள். அவர்களை தேடிப்பிடித்து கௌரவிக்கவேண்டும். தங்களுக்கு வேண்டியவர்களுக்கும், தகுதி இல்லாதவர்களுக்கும் விருது வழங்கி கௌரவிப்பது கேலிக் கூத்தாகும். ஒரு சில தகுதி வாய்ந்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் என்பதும் உண்மையே.

"இரா"

### கவிஞர் மலைத்தம்பிக்கு பாராட்டு விழா

கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சிட்டிமிஷன் மண்டபத்தில் 29-12-1996 அன்று கவிஞர் மலைத்தம்பிக்கு பாராட்டு விழா குழுத்தலைவரும், தொழிலதிபரும், சமாதான நீதவானுமாகிய எஸ். முத்தையா அவர்களின் தலைமையில் மிக விமர்சையாக நடைபெற்றது.

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமனின் வரவேறிபுரையோடு ஆரம்பமான இவ்விழாவில் கவிஞர் மு. க. ஈழக்குமாரின் கவி வாழ்த்து அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது எனலாம்.

ரூபராணி ஜோசப், திருமதி. குணவதி சிவசுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, தமிழ்மணி, அல்ஹாஜ் கல்ஹின்னை எம். எச். எம். ஹலீம்தீன் வாழ்த்துமடல் வாசித்து வழங்கினார்.

கவிஞர் மலைத்தம்பியின் கலை - இலக்கிய, சமூக, பத்திரிகைத்துறை சேவைகளுக்காக தொழிலதிபர் லக்கிலேண்ட் எஸ். முத்தையா ஜே. பி. அவர்களால் பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அன்னாருக்கு பொற்கிழியும் திரு. முத்தையா அவர்களால் வழங்கப்பட்டது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களுக்கு ஸ்ரீ லங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி அவர்களும், நாவலர் ஏ. இளஞ்செழியன் அவர்களுக்கு சமூகத் தொண்டர் ஏ. அரியரத்தினம் அவர்களும் மலர் மாலை அணிவித்து கௌரவித்தார்கள்.

கலாநிதி துரை மனோகரன், திரு. செ. நடராஜா, திரு. க. ப. சிவம் திரு. ஐ. ஏ. றசாக், கவிஞர் சு. முரளிதரன், திரு. அந்தனிஜீவா, திரு. லோரன்ஸ், திரு. எம். எம். பீர் முகம்மது ஆகியோர் மலைத்தம்பியைப் பாராட்டி உரையாற்றினார்கள்.

விழாத் தலைவர் திரு. எஸ். முத்தையா ஜே. பி. அவர்களுக்கு திரு. துரை விஸ்வநாதன் ஜே. பி. அவர்கள் மலர்மாலை சூடி கௌரவித்தார்கள். இறுதியாக கவிஞர் மலைத்தம்பி பதில் உரையாற்றினார்.

கண்டிக்குமரன்

### கண்டி தந்த சிறந்த பேச்சாளர்
### சொல்லின் செல்வர் செ. நடராஜா



கண்டியில் அனைவராலும் மதிக்கப்படும் ஒருவராக திகழும் திரு. செ. நடராஜா அவர்கள் அசோகா வித்தியாலயத்தில் கல்வியை ஆரம்பித்து சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று பி. எஸ்ஸி பட்டமும் பெற்றவர், கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக மேற்படி வித்தியாலயத்தில் முதல்வராக கடமையாற்றி வருகின்றார். இலங்கை, இந்திய நட்புறவுச் சங்கத்தின் செயலாளராகவும், மத்திய மாகாண இந்து மாமன்ற முக்கிய உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றார். கண்டியில் சிறந்த பேச்சாளரான இவருக்கு மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் சார்பில் கலாநிதி துரை மனோகரன் அவர்கள் "சொல்லின் செல்வர்" என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார். இவர் தலைமை தாங்கும் இலக்கிய மேடையாகவிருந்தாலென்ன, பட்டிமன்றமாகவிருந்தாலென்ன அம்மேடைகளை ஒழுங்குபடுத்தி அவ்விழாக்களை சிறப்பாக நடத்தி முடிப்பதில் வல்லவர். இவரது துணைவியார் திருமதி லலிதா நடராஜா பி. ஏ. (சிறப்பு) அவர்களும் ஒரு சிறந்த பேச்சாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது மூத்த புதல்வியான வாசுகி சோவியத் ரஷ்யாவில் கல்வி பயின்று இன்று இலங்கையில் டாக்டராக பணியாற்றுகின்றார். அண்மையில் கண்டியில் அவருக்கு திருமணம் நடைபெற்றது. இவரது இரண்டாவது புதல்வி வசுமதி கணக்கியல் துறையில் பயிற்சிப் பெறுகின்றார். எனது உள்ளத்தில் பதிந்து இருக்கும் சிலரில் திரு. நடராஜாவும் ஒருவர் என்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### செல்வி கமலினி நமசிவாயம் பி. ஏ.
### (சிறப்பு)

எங்கள் இலக்கிய குடும்பத்தைச் சேர்ந்த செல்வி கமலினி நமசிவாயம் பேராதனை பல்கலைக்கழகத்தில் முற்போக்கு எழுத்தாளர் அகஸ்தியரின் இலக்கியப் படைப்புக்களையும் ஒரு பாடமாகக் கொண்டு ஆய்வு செய்து 19-12-96 அன்று பி. ஏ. பட்டத்தினை பெற்றுக் கொண்டார். இவர் ஒரு பேச்சாளர், எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய வளர்ச்சியில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் பங்கு கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதோடு வாழ்த்துகின்றோம்.

### கண்டி பெண் எழுத்தாளர்கள்
### திருமதி நளாயினி சுப்பையா

சிறுகதை எழுத்தாளரான திருமதி நளாயினி சுப்பையா மலையகத்தை பிறப்பிடமாக கொள்ளாவிட்டாலும் மலையகத்திற்கு மருமகள் இவர். இவரது கணவர் மாத்தளையை பிறப்பிடமாகக்ஹ கொண்டவர். பாடசாலை ஆசிரியராக தமது தொழிலை ஆரம்பித்த இவர் இப்போது மத்திய மாகாண தமிழ் இந்துக் கலாசார அமைச்சில் கலாசார உத்தியோகஸ்தராக கடமை புரிந்து வருகின்றார். மலையகச் சிறுகதைகள் என்றத் தொகுப்பில் இவரது சிறுகதை இடம் பெற்றுள்ளது. முதலாவது மலையக சாகித்திய விழாவை முன் நின்று நடாத்தி வெற்றி கண்டவர். இவரது "அவள் தனிமரமல்ல" சிறுகதைத் தொகுதி அச்சில் உள்ளது. மேலும் இவரது இலக்கியப் பணித் தொடர வாழ்த்துகின்றோம்.

### ஒரு இலக்கியவாதியின் பதிவுத் திருமணம்

வீரகேசரி துணை ஆசிரியரும், இலக்கியவாதியுமான வி. தேவராஜ் அவர்களுக்கும், கிழக்குப் பல்கலைக்கழகத் மெய்யியல்துறை விரிவுரையாளருமான வாசுகி அவர்களுக்கும் கடந்த மாதம் 12ம் திகதி கொழும்பில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. கண்டியிலிருந்து நானும், ரூபராணி ஜோசப் அவர்களும் கலந்து கொண்டோம். வெகு விரைவில் கொழும்பில் திருமணம் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

### கண்டி இலக்கியச் செய்தி மடல் வளர்ச்சிக்கு
### நல்ல மனங்களின் நன்கொடைகள்

கொழும்பைச் சேர்ந்த ஒரு நல்லிதயம் தனது பெயரை குறிப்பிட வேண்டாம் என உறுதி வாங்கிக் கொண்டுகண்டி இலக்கிய செய்தி மடல் வளர்ச்சிக்கு ஐயாயிரம் ரூபா (5000.00) தந்து உதவினார்.

கண்டி வீரகேசரி கண்டிக் கிளையைச் சேர்ந்த வீரகேசரி அபிவிருத்தி அதிகாரி சேகரன் சோமபாலன் அவர்கள் கண்டி இலக்கிய செய்தி மடல் வளர்ச்சிக்கு 500 ரூபாவுக்கான வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து உதவினார்.

கொழும்பு தமிழ் நெஞ்சம், தமிழ் மணி நண்பர் மானா எம். எம். மக்கீன் அவர்கள் 200 ரூபாவுக்கான காசோலை அனுப்பி செய்தி மடல் வளர்ச்சியில் அவரும் பங்கு கொண்டார்.

அட்டன் கொந்தளிப்பு சஞ்சிகையின் ஆசிரியர் மு. நேசமணி அவர்கள் 100 ரூபாவுக்கான காசோலை அனுப்பி செய்தி மடல் வளர்ச்சியில் ஒருவராக இணைந்து கொண்டார். இவர்களுக்கு மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் தமது மனம் நிறைந்த நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

-ஆசிரியர்-

### வாசகர்களுக்கு ஓர் நற்செய்தி

கண்டி சத்யோதய நூல் நிலையத்தில் ஆயிரத்திற்கு மேலான தமிழ் புத்தகங்கள் உள்ளன. ஆய்வுக்கான தேடலில் ஈடுபட்டிருப்போருக்கு இந்நூல் நிலையம் மிக வசதியாக அமைந்துள்ளது. இந்நூல் நிலையத்தின் நூலகராக திருமதி. பியந்தி விஜயசிங்க கடமையாற்றுகின்றார். ஓரளவு தமிழ் மொழியையும் வாசிக்கும் திறமை கொண்டவர் இவர்.

### கண்டி மாவட்ட பத்திரிகையாளர்கள்
### (தினகரன்)

திரு. ஸ்டார் எம். எம். ராஸிக் - ஹாரிஸ்பத்துவ
திரு. இஸட் எம். ராஸிக் - கண்டி அலுவலகம்
திரு. எஸ். ஏ. ஆர். எம். ஹைருதீன் - வத்துகாமம்
திரு. எஸ். எம். ஜவாத் - ஹாரிஸ்பத்துவ
திரு. ஏ. ஆர். எம். ஹாபிஸ் - அக்குரணை
திரு. ரஷிப் எம். றியாழ் - கண்டி
திரு. என். எம். அக்ரம் - குண்டசாலை
திரு. எஸ். பி. பமதக்ஷன் - தினகரன் - ராவய, டி. என். எல்.

### அந்தனிஜீவாவிற்கு அரச இலக்கிய விருது.



அரசகரும மொழித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் தமிழ்த்தின விழாவில் 'மலையகமும் இலக்கியமும்' என்ற நூலுக்கு அந்தனிஜீவா ஆற்றிய இலக்கியப் பணிக்காகவும், 30-12-96ல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரச இலக்கிய விருதும், பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அரச இலக்கிய விருதினை தமிழ்நாடு தஞ்சாவூர் முன்னைநாள் துணைவேந்தர் 'அவ்வை நடராஜன்' வழங்கினார். 'கொழுந்து' சஞ்சிகையின் ஆசிரியரான அந்தனிஜீவா கலை, இலக்கியத்துறையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி வருபவர். 'ஈழத்தில் தமிழ் நாடகம்', அன்னை இந்திரா, சுவாமி விபுலானந்தர், காந்தி நடேசய்யர் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். 'மல்லிகை பந்தல்' மூலம் இவரது 'இவர்கள் வித்தியாசமானவர்கள்' என்ற நூல் விரைவில் வெளிவர உள்ளது.

இவரது 'அக்கினிப் பூக்கள்' நாடகம் 12 தடவைகள் மேடையேறியுள்ளது. 'அலைகள்', 'ஆராரோ ஆரிவரோ' ஆகிய நாடகங்கள் தேசிய நாடக விழாவில் விருதுகளைப் பெற்றுள்ளது. கலாசார அமைச்சின் மலையக கலாசார மேம்பாட்டுக்குழு உறுப்பினராக செயற்பட்டு வருகின்றார். மலையகத்தலைவர்களைப் பற்றி 'மலையக மாணிக்கங்கள்' என்ற நூல் விரைவில் வெளிவர உள்ளது.

இரா. அ. இராமன்.

### மணிவிழா கண்ட சோமகாந்தனுக்கு கண்டியில் பாராட்டு விழா

கொழும்பில் அண்மையில் மணிவிழா கண்ட எமது இலக்கிய குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர் சோமகாந்தனுக்கு மலையக கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் இம்மாதம் 26ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பாராட்டு விழா. முற்போக்கு எழுத்தாளரும், சமூகத் தொண்டரும், எல்லோருக்கும் இனியவரான இந்த மனிதரை, இலக்கிய நேசரை, அன்புக்குரியவரை வாழ்த்துவதற்கு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம். மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும், கண்டி இலக்கிய செய்தி மடலும் அன்னாரை நூறாண்டு வாழ்ந்து இலக்கிய, சமூகப் பணியாற்ற வாழ்த்துகின்றது. வளமாக வாழ வாழ்த்துகின்றது.

### எங்கள் இலக்கிய குடும்பத்தைச் சேர்ந்த சிலருக்கு அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம்

திருமதி. லலிதா நடராஜா (ஆசிரியை) திரு. சாரல் நாடன் (எழுத்தாளர்)
திரு. க. ப. சிவம் (பத்திரிகையாளர்) திரு. பெ. முத்துலிங்கம் (எழுத்தாளர்)
திரு. அந்தனிஜீவா (பத்திரிகையாளர்) கவிஞர் சு. முரளீதரன் (விரிவுரையாளர்)

இக் கௌரவத்தைப் பெற்ற எங்கள் இலக்கிய குடும்பத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளுக்கு மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் கண்டி இலக்கிய செய்தி மடலும் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றது.

### வாசகர்களுக்கு

இவ்விதழைப் பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். அவை தாம் இப்பத்திரிகையின் தரத்தை உயர்த்தும் தூண்டுகோலாக அமையும்.

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சி மலைச் சாரலிலே..........

– மலைநேசன் –

## மலையக தமிழாராய்ச்சி மாநாடும் அந்தனி ஜீவாவும்

மலையக தமிழாராய்ச்சி மாநாடு பற்றி இங்கு குறிப்பிடுவது எனது நோக்கமல்ல, ஆனால், பத்திரிகையொன்றில் அண்மையில் இம்மாநாடு பற்றிய குறிப்பொன்றை எழுதிய அந்தனி ஜீவா, ஒரு மோசமான, தவறான குறிப்பொன்றையும் அதிற் குறிப்பிட்டிருந்தார். பேராசிரியர் கா. சிவத்தம்பி அம்மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என்று கலாநிதி ஒருவர் பரப்பிய வதந்தியினால், பல்கலைக்கழக மாணவர்களும் பிறரும் அதிற் கலந்துகொள்ளவில்லை என்றும், பின்னர் சிவத்தம்பி கலந்து கொள்கிறார் என்ற செய்தி தெரிந்த பின், சிலர் கலந்து கொண்டனர் என்றும் அந்தனி ஜீவா குறிப்பிட்டிருந்தார். நான் அறிந்த வரையில், எந்தவொரு கலாநிதியாவது இவ்வாறான வதந்தியைப் பரப்பவில்லை. பொதுவாகவே பேராசிரியர் சிவத்தம்பி மீது பல்கலைக்கழகத்தைச் சார்ந்த அனைவருக்கும் பெருமதிப்பு உண்டு. அந்தனி ஜீவாவை விட சிவத்தம்பி அவர்களைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தோர் நன்கு அறிவர். ஆகவே, இவ்வாறான ஒரு வதந்தியை யாரும் பரப்பவில்லை. மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பாகப் பல்கலைகழகத்தைச் சார்ந்தோர் பெரும்பாலும் அலட்டிக் கொள்ளவில்லை என்பதே உண்மை. உண்மை இவ்வாறு இருக்க, மனம்போன போக்கில் பொய்யான செய்திகளை பத்திரிகை வாயிலாகப் பரப்புவது, அந்தனி ஜீவாவுக்கு அழகல்ல.

## ஓர் இனிய கலை விழா

சில மாதங்களுக்கு முன்னர் கண்டி மொபிறேக் கல்லூரியில் இடம்பெற்ற கலை விழா கண்களுக்கும், செவிகளுக்கும், மனதிற்கும் இனிமையை அளித்த சுவையான நிகழ்ச்சியாக அமைந்தது. பாடல்கள், நடனங்கள், நாடகங்கள் அனைத்தும் தரமாக அமைந்திருந்தன. சில பாடசாலைகளில் கலை விழாக்கள் என்ற பெயரில் இடம்பெறும் நாகரிகக் கோமாளிக் கூத்துகளைப் போலன்றி, கலை அம்சங்கள் பேணப்படும் வகையில் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. கலை விழாவோடு சம்பந்தப்பட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்.

## மலையகமும் நாடகமும்

பொதுவாகவே அண்மைக் காலத்தில் இலங்கையின் தமிழ் நாடக வளர்ச்சி குறிப்பிடத்தக்க நிலையை அடைய முடியாமற் போய்விட்டது. எழுபதுகளில் இலங்கைத் தமிழ் நாடகத் துறையில் காணப்பட்ட அபரிமித வளர்ச்சி, காலப்போக்கில் தேக்கமுறத் தொடங்கிவிட்டது. அதற்கு நாட்டின் சூழ்நிலை ஒரு முக்கியமான காரணமாகும். மலையக தமிழ் நாடகம் தொடர்பாகவும் இது பொருந்தும். இருந்த போதிலும், மலையகத்தில் தமிழ் நாடகம் வளர்ச்சியுற முடியாமைக்கு இன்னொரு காரணமாக விளங்குவது மலையக அரசியல் வாதிகளின் போக்குமாகும். எல்லோரையும் குறிப்பிட்டுக் கூறமுடியாவிடினும், பெரும்பாலான அரசியல்வாதிகளின் போக்கே மலையகத்தில் தமிழ் நாடகம் வளரத் தடையாகவுள்ளது என்பது ஒரு கசப்பான உண்மை. தரமான நாடகங்கள் மக்கள் வாழ் நிலையின் பிரதிபலிப்புகளாக விளங்கவேண்டும். ஆனால், எமது அரசியல்வாதிகளினால் மக்களின் பிரச்சனைகள் நாடகங்களின் மூலம் காட்டப்படுவதை ஜீரணிக்க முடிவதில்லை. மலையகத்தில் பாலும் தேனும் ஓடுவதாகச் சித்திரிப்பதையே பெரும்பாலும் அவர்கள் விரும்புகிறார்கள். இதை வெளிக்காட்டாமல், அவர்கள் மேடைகள் தோறும் கூறிக் கொள்வது, மலையகத்தவர்க்கு தன்னம்பிக்கையூட்டும் நாடகங்கள் படைக்கப்பட வேண்டும் என்பதாகும். மலையக பிரச்சனைகளை நாடகங்கள் வெளிப்படுத்தித்தான் மக்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்த முடியும் என்ற உண்மையை மலையகத்தின் பெரும்பாலான அரசியல்வாதிகள் ஒத்துக்கொள்ள விரும்புவதில்லை. மலையகப் பிரச்சனைகள் நாடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டால், எங்கே தங்களை அவை பாதித்து விடுமோ என்ற அச்சமே அதற்கான முக்கிய காரணம் எனலாம். சிங்கள அரசியல்வாதிகளிடம் இல்லாத இந்த நிலைப்பாடு, மலையக அரசியல்வாதிகளிடம் இருப்பது வேதனைக்குரியது.

## நூல் வெளியீடுகள்

அண்மையில் கொழும்பில் இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மூன்று நூல்களும் பண்பாடு பருவ இதழும் வெளியிடப்பட்டன. பேராசிரியர் சி. பத்மநாதனால் பதிப்பிக்கப்பட்ட இந்துக் கலைக் களஞ்சியம் (பகுதி மூன்று) கலாநிதி துரை மனோகரனால் பதிப்பிக்கப்பட்ட கதிரை மலைப் பள்ளு, க. இரகுவரனால் பதிப்பிக்கப்பட்ட ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டு ஆகியவையே அம்மூன்று நூல்களும் ஆகும். பிரதிக் கலாசார அமைச்சர் திரு. கரவீர பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வெளியீட்டு விழாவில், பேராசிரியர் சி. பத்மநாதன், கலாநிதி துரை மனோகரன், க. செ. நடராஜா, திருமதிகள் ராஜலட்சுமி கைலாசநாதன், சாந்தி நாவுக்கரசு ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

## மலையகத்தில் பிறக்காவிட்டால்..................

மலையகம் இன்று கலை வளம் செழிக்கும் ஒரு பிரதேசமாக வளர்ச்சியுற்று வருகின்றது. மலையகத்துக்கு சேவை செய்யும் கலை – இலக்கியவாதிகளை மதிக்கும் பண்பும் வளர்ச்சி பெற்று வருகின்றது. ஆனால், மலையகத்தைச் சார்ந்த சிலரிடத்தில் மாத்திரம் பிரதேச வெறி அதிகமாகிக் கொண்டு வருகின்றது. அண்மையில் ஓர் அமைப்பு கலை – இலக்கியவாதிகளைக் கௌரவிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. கௌரவிக்கப்பட இருப்பவர்களில் ஒருவராக எழுத்தாளர் ரூபராணி ஜோசப்பும் தேர்ந்தெடுக்கப்பட்டார். குறிப்பிட்ட அமைப்பைச் சார்ந்தவர்கள், இரு முறை வெவ்வேறு குழுக்களாக ரூபராணியைச் சந்தித்து, அவர் பற்றிய தகவல்களைப் பெற்றுச் சென்றார்கள். அவர் கௌரவிக்கப்பட இருப்பதையும் அவரிடம் தெரிவித்தார்கள். மூன்றாம் முறை அவரைச் சந்தித்த அவ்வமைப்பைச் சார்ந்தவர்கள் சிலர், அவர் மலையகத்தில் பிறக்காதமையால் கௌரவிக்க இயலவில்லை எனத் தெரிவித்தார்கள். இத்தனைக்கும் ரூபராணி ஜோசப் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டிருந்த போதிலும் அவரது சேவை முழுவதும் மலையகத்துக்கே பயன்பட்டு வந்துள்ளது. மலையகத்தில் பிறக்காவிட்டால், குறிப்பிட்ட ஒருவர் எவ்வளவு சேவையாற்றினாலும் கௌரவிக்கப்பட தகுதிப் பெறமாட்டார் எனச் சில மலையக அமைப்புகளும், பிரமுகர்களும் (எல்லோருமல்ல) சிந்திப்பது நன்றி மறந்த செயலாகவே கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப்பந்தல்



## வாருங்கள் தோழிகளே

சிவரமணி, நம்பிக்கையின் நட்சத்திரமாக திகழ்ந்தவர். மக்களின் விடிவுக்கு எழுதுகோலை தனது இளம் தோளில் சுமந்தவர். இவரொரு "எழுத்துப் போராளி" சமூக மாற்றத்திற்கு பெண்ணினத்தை துடித்தெழச் செய்த இவர் ஏனோ தன்னையே மாய்த்துக் கொண்டார். இவரது கவிதைகள் தீப்பறக்கும் கவிதைகள் இதோ அவரது கவிதைகளில் ஒன்று.

—ஆசிரியர்—

என் இனிய தோழிகளே
இன்னுமா தலைவார
கண்ணாடி தேடுகிறீர்?
சேலைகளை சரிப்படுத்தியே
வேளைகள் வீணாகின்றன.
வேண்டாம் தோழிகளே
வேண்டாம்.
காதலும் கானமும்
எங்கள்
தங்கையர் பெறுவதற்காய்
எங்கள் கண்மையையும்
இதழ்பூச்சையும்
சிறிதுகாலம் தள்ளிவைப்போம்.
எங்கள் இனம் தோள்களில்
கடமையின் சுமையினை
ஏற்றிக் கொள்வோம்.
ஆடையின் மடிப்புகள்
அழகாக இல்லை என்பதற்காக
கண்ணீர் விட்ட நாட்களை
மறப்போம்.
வெட்கம் கெட்ட
இந்த நாட்களை
மறந்தே விடுவோம்.
எங்கள் தோழிகள் பலரும்
உலகில் இன்று
கண்மையையும் இதழ்பூச்சையும்
மறந்து போயினர்.
ஆனால்
தமது மணிக்கரத்தை
பிணைத்த விலங்கை
அறுத்தனர்.
வாருங்கள் தோழிகளே
நாங்களும் வழிசெய்வோம்.
மண்ணால் கோலமிட்டு
அழிந்தது போதும்.
எங்கள் வெந்நீரில் கோலமிட்டு
வாழ்க்கைக் கோலத்தை
மாற்றி வரைவோம்
வாருங்கள் தோழிகளே.
சரிகை சேலைக்கும்
கண்ணிறைந்த காதலர்க்கும்
காத்திருந்த காலங்கள்!
அந்த வெட்கம் கெட்ட
காலத்தின் சுவடுகளை
அழித்து விடுவோம்.
புதிய வாழ்வின்
சுதந்திர கீதத்தை
இசைத்துக் களிப்போம்
வாருங்கள் தோழியரே.

—எழுத்துப்போராளி
சிவரமணி—

## மலையகப் பெண்ணே!

அகிலா,
நீ ஆசிரியை
ஆகிவிட்டாய்!
மலையகத்
தோட்டப் பாடசாலையில்
நிலையான கல்வி
நிறைய
நிதமும் பாடம் சொல்.
ஒவ்வொரு "லய"
வீட்டிலும்
ஒரு கல்விச்சூரியன்
உதிக்க வைக்க
உன்னால் முடியும்.
அறியாமை
குப்பி விளக்கு
அணையட்டும்
அறிவு மின்விளக்கு
உதயத்தில்
ஒவ்வொரு வீடும்
விடியட்டும்.
உன் ஆச்சி ஆராயி
பிள்ளை மடுவத்தில்
"ஆராரோ" பாடினாள்.
உன் அம்மா அஞ்சலை
தேயிலை மலைகளில்
கொழுந்து
கிள்ளினாள்.
நீ புத்தகம் படித்து
புத்தியை பெற்றாய்!
புறப்படு அகிலா
புதிய மலையகம்
பூக்க—
சிறப்பான சேவை செய்.
மலையகப் பெண்ணே
உழைப்பாளர்
நிலைமாற
உறுதியுடன் நிமிர்வோம்.

கலா விஸ்வநாதன்

## என்றும் நினைத்திருப்பேன்

லயத்துக்
காம்பரிலிருந்து
வந்த
பீனிக்ஸ்
பறவை நான்.......!
நாட்டை
வெளிச்சமாக்கி விட்டு
தன்னுடைய
வாழ்க்கையை
இருட்டாக்கிக்
கொண்ட
சமூகத்தின்
சந்ததி நான்
என்
பாட்டன் முதல்
தாய் வரை
அத்தனைப் பேரும்
தேயிலைச் செடிமூலம்
இந்நாட்டுப்
பொருளாதாரத்திற்கு
உயிர் வார்த்தவர்கள் !
பல்கலைக்கழகம்
வரை
என்வாழ்க்கை
வளர்ச்சி பெற
தங்களுடைய
உதிரத்தை—
உரமாக்கியவர்கள் !
இவைகள்
என் மனதில்
என்றும்
ஞாபக சின்னங்கள் !
சுற்றும்
பூமியே
எனதானாலும்
என்னை
செதுக்கிய
சிற்பிகளின்
ஞாபகங்கள்
என்றும்
நிழலாடிக்
கொண்டேயிருக்கும் !
நான்
பட்டங்கள்
பெற்ற பின்
வானில்
பட்டமாய்
பறப்பவனில்லை............
மரணம்
என்னை
தழுவிக் கொள்ளும்
வரையில்
மலையக
மண்ணில்
என்
சுவடுகளைப்
பதித்துக்
கொண்டிருப்பேன்

.....

கோ. சுரேஸ்
பேராதனைப்
பல்கலைக்கழகம்
நன்றி குன்றின் குரல்

## எனது கவிதையின் ஜீவ துடிப்புக்கள்!

"நமக்கு தொழில் கவிதை" என்றான் பாரதி. கவிதை புனைதலை பலர் தொழிலாகக் கொண்டிருக்கலாம். ஆனால், எனக்கு கவிதை தொழில் அல்ல. எனது இரத்த நாளங்களில் ஓடும் உயிர்த்துடிப்பு, தீமையைக் கண்டு கொதித்தெழுந்த உணர்வின் வடிகால்.

பொழுது போக்காக. மனக்கிளர்ச்சிகளின் உந்துதலால் எழுதப்பட்டவையல்ல எனது கவிகள். மலைகள் அவைகளில் ஓய்வு கொள்ளும் முகில்கள், அதன் மேனியெங்கும் பட்டொளி வீசி பரிமளிக்கும், தேயிலை பசுமைகள்! அம்மண்ணின் அடியில் புதைக்கப்பட்ட இம்மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கை சரிதங்கள். இவை யாவும் எனது கவிதைகளின் "கருக்கள்" இவர்கள் கொட்டிய கண்ணீரும், செந்நீரும், வேதனைக் குமுறல்களும், விட்டிடும் ஏக்கப்பெருமூச்சுகளும், எதிர்கால கனவுத் தரிசனங்களுக்காக நிகழ்கால வாழ்வின் சுகங்களை எவரெவர்களுக்கோ அர்ப்பணித்துவிட்டு, வெறுமையை அரவணைத்து ஏங்கும் நெஞ்சங்களும் எனது கவிதையின் ஜீவ துடிப்புக்கள்!

—குறிஞ்சி தென்னவன்—

## சங்கம் முழங்கும் தங்கை

மலைநாட்டு — முத்தாமி
நங்கை — இலங்கை
மணி நாட்டு
உழைப்பாளி — நங்கை
தளிராயும் அவள் நீட்டும்
செங்கை — இந்த
தரணிக்கே — முழங்கிடும்
நம் நாட்டின் சங்கை

ஈழக்குமார்

## நல்ல இலக்கியம்

நல்ல இலக்கியம் என்பது எரியும் பிரச்சனைகளை இனம் காட்டி விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும் மனித வாழ்வின் முரண்பாடுகளை சித்தரித்து புதிய உலகிற்கு நம்மை அழைத்துப் போக வேண்டும். உங்களது கவிதைகள் இதன் அடிப்படையில் அமையட்டும்.

## யதார்த்தம்

மிடில்டன். சி. சாரதா

தேர்தல்
காலங்களில் மட்டும்
எமது வாக்கு
ஒவ்வொன்றையும்
பொன்னாகக் கருதும்
அபேட்சகர்களே!
எங்கள் வாழ்வு மண்ணாகியும்
எங்கள் வாக்குகளை
உங்களுக்கே
அளிக்கும்
சக்தியை கூட
இழந்தும்
இன்னும் — இந்த
மாட்டுப்பட்டி
யதார்த்தத்தைக் கூட
நீங்கள் அறியாமலிருப்பதேனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதைச்சாரம்



இச்சிறுகதையின் ஆசிரியர் செல்வன் பாலசந்திரன் ஞானசேகரன் இளம் எழுத்தாளர், சிறுகதை, கவிதை, கட்டுரைகளை எழுதி வருகின்றார். G. C. E. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிவிட்டு முடிவுக்காக காத்திருக்கின்றார். சாந்த அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்ற இவருக்கு வயது பதினைந்து. இலங்கையின் பிரபல நாவலாசிரியர் டாக்டர் தி. ஞானசேகரனின் புதல்வர் என்பது குறிப்பிடத் தக்கது. வளரத் துடிக்கும் இந்த இளம் எழுத்தாளரை உற்சாகப்படுத்தும் முகமாக இச்சிறுகதையை மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கின்றோம்.

– ஆசிரியர் –

# மாற்றம்

ஞா. பாலச்சந்திரன்.

சுழல் காற்றாடியின் சுழற்சியால் ஏற்பட்ட காற்றில் அந்த மண்ணிற பை பட படத்துக் கொண்டிருந்தது. அந்தப் பையை பார்க்கும் போதெல்லாம் சுதனின் நெஞ்சை ஏதோ செய்தது. என்றைக்கும் இல்லாத ஒரு தவிப்பு, தடுமாற்றம். இன்று காலை மனோகர் தனது பரிசாக கொடுத்துச் சென்ற அந்தப் பையை இன்னமும் அவன் திறந்து கூட பார்க்கவில்லை. எப்படிப் பார்க்க முடியும்? அவன் மனோகருக்குச் செய்த காரியத்திற்கு எப்படி அவன் தந்த பரிசைப் பார்க்க முடியும்?

சுதன் ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனின் தந்தையின் உழைப்பால் "சுதன் அன் கோ" எனும் ஒரு கம்பனியை மகன் பேரில் ஆரம்பித்து வைத்தார். சென்ற வருடம் சுதன் "பட்டயக் கணக்காளர்" படிப்பு முடித்த உடன் தந்தை மகன் பேரில் கம்பனிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டார். சுதன் சற்று வித்தியாசமானவன். தான் நினைத்தது நடக்க வேண்டும் என எண்ணம் கொண்டவன். மற்றவர்களின் உணர்ச்சியை மதிக்கத் தவறியவன். தன் சுகத்திற்காக எதையும் செய்வான். இதனால் சுதனுக்கு எதிரிகளே அதிகம். மனோகரையும் சுதனுக்கு ஏனோ பிடிக்கவில்லை. மனோகரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டுத் தன் நண்பனொருவனைப் பதவியில் அமர்த்த விரும்பினான்.

கடந்த ஒரு வார காலமாக மனோகர் வேலைக்குச் சமூகமளிக்கவில்லை. தன் தாயின் திடீர்ச் சுகயீனம் காரணமாகத்தான் அவன் சமூகமளிக்கவில்லை என்பது சுதனுக்குத் தெரியும். ஆனாலும், வேலை அதிகமாக இருந்ததால் லீவு மனு மனோகர் சமர்ப்பிக்க தவறிவிட்டான். இது சுதனுக்கு எரிச்சலூட்டியது. "சரியாகக் காரியாலயத்தில் இயங்கவில்லை, லீவு மனுவும் சமர்ப்பிக்கவில்லை ஆகையால் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றீர்" என ஒரு கடிதம் எழுதி மனோகருக்கு அனுப்பிவிட்டான்.

இன்று காலை மனோகர் வந்திருந்தான். அவனுடைய ஆசனத்தை இன்னொருவன் ஆக்கிரமித்திருந்தான். சுதனை மனோகர் சந்தித்து "சேர் உங்கட கடிதம் கிடைத்தது, நன்றி. நான் போய்ட்டு வாறன். இதை என்னுடைய சிறிய அன்பளிப்பா வைத்திருங்கோ" எனக் கூறி மண்ணிறப்பையை மேசையில் வைத்துவிட்டுச் சுதனின் பதிலுக்கு காத்திருக்காமல் வெளியேறி விட்டான். சுதன் விக்கித்துப் போனான். இப்படியும் ஒரு மனிதனா?

நேரம் 5.30 ஐக் காட்டியது. அலுவலகத்தில் அனைவருமே சென்றுவிட்டார்கள். சுதன் மனம் சரியில்லாததால் அவன் இன்னமும் வீடு செல்லவில்லை. சுதன் என்ன நினைத்தானோ தெரியவில்லை மண்ணிறப்பையைத் திறந்தான்.

"சேர் நான் போகட்டா?" பியோன் கேட்டான். சுதனின் பார்வை அவனை ஒடுக்கிவிட்டது.

"வீட்டில விருந்தாளிங்க வந்திருக்காங்க" பாதாளத்தில் இருந்து கேட்பது போலக் கேட்டது பியோனின் குரல்.

"நான் போகும் வரைக்கும் போக ஏலாது" சுதனின் கட்டளை. பியோன் முனுமுனுத்துக் கொண்டு நகர்ந்தான்.

மண்ணிறப்பையைத் திறந்த சுதனின் கரங்களுக்கு ஒரு மிகச்சிறிய புத்தகம் அகப்பட்டது. புத்தகத்தின் அட்டையில் "மனிதாபிமானம்" எனப் பளிச்சென எழுதப்பட்டிருந்தது.

புத்தகத்தைக் கண்ட சுதன் மெதுவாக நகைத்தான். இதுவரை பாடப் புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்களை தொட்டுக்கூட பார்க்காமல் வளர்ந்தவன் சுதன். "மனிதாபிமானம்" என்ற புத்தகத்தை மேசையில் எறிந்துவிட்டு வீட்டுக்குப்போக ஆயத்தமானான். பின்னர் என்ன நினைத்தானோ தெரியவில்லை கதிரையில் அமர்ந்து அந்த நூலைப் புரட்டிப்பார்த்தான்.

நேரம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. இதுவரை புத்தகமே வாசிக்காத சுதன், மனோகர் பரிசாக தந்த நூலில் பல பக்கங்கள் வாசித்துவிட்டான். ஒரு நொடிப்பொழுது வாசிப்பதை நிறுத்திவிட்டு மேசையில் இருந்த "பேப்பர் வெய்ட்டை" உற்றுப்பார்த்தான். பின்னர்

"ரவி................ரவி.................." பியோன் விழுந்தடித்து ஓடிவந்தான். "நீ வீட்டுக்கு போ............. நான் பிறகு போறன். சாவியை மேசையில் வை" என்றான் சுதன்.

"நம்ம முதலாளியா இப்படி சொல்லுறாரு" என எண்ணி ஒரு விநாடி பியோன் விக்கித்து நின்றான்.

நேரம் யாருக்கும் காத்திராமல் ஓடிக்கொண்டிருந்தது. சுதன் முழுமையாக நூலை வாசித்துவிட்டான். அவன் முதல் தடவையாக வாசித்த நூல் இதுவே தான். நூலை வாசித்ததிலிருந்து சுதன் மனதில் ஒருவித போராட்டம்.

தனது மேசையில் இருந்த பைல் ஒன்றைப் புரட்டி அதில் மனோகருக்கு அனுப்பிய கடிதத்தில் நகலை தனியாக கழற்றி ஒரு முறை வாசித்தான். பின்னர் கசக்கி எறிந்துவிட்டு வீட்டிற்கு புறப்பட்டான். மறக்காமல் "மனிதாபிமானம்" நூலையும் எடுத்துக் கொண்டான்.

சுதன் இவ்வளவு நேரமாகி வீட்டிற்கு செல்வது இதுதான் முதல் தடவை. நேரம் ஒன்பதைக் காட்டியது. காரின் அருகில் சென்று டிரைவர் கதவைத் திறந்தான். உள்ளே டிரைவர் அசதியால் கண்ணயர்ந்திருந்தான். சுதன் அவன் தோளில் கை வைத்ததும் அலறி அடித்துக்கொண்டு எழும்பினான். அவன் நா பயத்தால் உளறியது.

"சேர்... நா....ன் வ.....ந்..து"

அதன் டிரைவரின் தோளில் கையை போட்டுக்கொண்டு "அதெல்லாம் ஒன்னுமில்லப்பா, ஐ ஆம் சொறி, இனிமேல நீ ஆறு மணிக்கே வீட்டுக்கு போகலாம். இப்ப நானே காரோட்டிறன் நீ வீட்டுக்கு போ" எனக்கூறி ஒரு அழகிய இளநகையுடன் டிரைவர் சீட்டில் அமர்ந்தான் சுதன்.

ஏச்சு கிடைக்கும் என எதிர்பார்த்த டிரைவருக்கு ஆச்சரியம் கிடைத்தது. "நம்ம முதலாளி எப்படி மாறிட்டார்" எனக் கூறிக்கொண்டு காரை திரும்பி பார்த்து பார்த்து சென்றான். இதே கேள்விதான் சுதனின் மனதிலும் எழுந்தது. "நான் எவ்வளவு மாறிட்டன் கொஞ்ச நேரத்தில, புத்தகத்திற்கு அவ்வளவு சக்தியிருக்கா?" என மனதில் வினாவை எழுப்பியவாறு சுதன் காரை மனோகரின் வீட்டை நோக்கி செலுத்தினான். வானம் என்னவோ இன்று முகில்கள் இல்லாத இரவாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பூங்கா

**கலைஞர் எஸ். விஸ்வநாதராஜா
அவர்களோடு ஒரு நேர்காணல்.**



**சந்தித்தவர்
எம். எஸ். குவால்தீன்**

இலங்கைத் தமிழ் கலையுலகிலும் நாடகத்துறை மூலமும் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தி ஈழத்துத் திரைப்படங்களில் ஹாஸ்ய நடிகராகத் திகழ்ந்து தமிழ், சிங்கள, ஆங்கில திரைப்படங்களுக்குக் கூட திரைக்கதைகள் எழுதி தனக்கென ஒரு தனி வழி சமைத்துக் கொண்டிருக்கும் கலைஞர் கண்டி எஸ். விஸ்வநாதராஜா அவர்களின் ஒரு சிறிய சந்திப்பை இலக்கிய செய்தி மடலில் தருவதில் பெருமை கொள்கின்றோம்.

–ஆசிரியர்–

கேள்வி:– எவ்வாறு கலை ஆர்வம் தங்களுக்கு ஏற்பட்டது?
பதில் (விஸ்வநாதராஜா):– கண்டி சி. எம். எஸ். பாடசாலையிலும் அதன் பின்னர் மாத்தளை சென். தோமஸ் கல்லூரியிலும் கற்கின்ற காலத்தில் பாடசாலை நாடகங்களில் பல முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்து பலரது பாராட்டையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன். இதுவே கலைத்துறைக்கு ஆர்வத்தையூட்டியது.

கேள்வி:– பாடசாலை கல்வித்துறையில் உங்கள் நிலைப்பாடு இலக்கியம் எப்படி?
பதில்:– பாடசாலைக் கல்வியில் நான் எப்போதும் முதலிடம் தான். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர்கள் போதித்தார்கள். அப்போது பேச்சுப் போட்டிகளில் பரிசுகள் இலக்கிய நூல்களாகக் கிடைத்தது. அது எனது இலக்கிய ஆர்வத்திற்கு தூண்டுகோலாக அமைந்ததால் இன்று நான் இலக்கியத்திலும் சிறந்து விளங்குவதைத் தாங்கள் அறிவீர்கள்.

கேள்வி:– திரைப்படத்துறைக்கு எப்படி வந்தீர்கள்?
பதில்:– கலை ஆர்வத்தை முதலில் வழங்கியவர் அந்தோனி மாஸ்டர். அதன் பின்னர் இலங்கையில் திரைப்படத்துறைக்கு அறிமுகப்படுத்தியவர் திரு. ஏ. ரகுநாதன் அவர்கள். நிர்மலா படத்தின் மூலம். அதன் பின் பல படங்களிலும் மாறுபட்ட பல வேடங்களில் நடித்துள்ளேன்.

கேள்வி:– தங்கள் நாடகங்கள் ஏதும் வெளியிடங்களில் மேடையேற்றியிருக்கின்றீர்களா? எத்தனை நாடகங்களில் நடித்துள்ளீர்கள்?
பதில்:– ஆம். முதன் முறையாக கண்டியிலிருந்து கொழும்பில் மேடையேற்றப்பட்ட நாடகம் என்னுடைய நாடகமே. கண்டியிலிருந்து கொழும்பு சென்று நடித்த நடிகனும் நானே.

கேள்வி:– திரையுலகிற்கு தங்கள் பங்களிப்புகள் எவை?
பதில்:– எனது நாடகக் கதை ஒன்றை நேரில் ரசித்த சிங்கள திரைப்பட இயக்குனர் ஜோ. தேவானந்த அக்கதையை என்னிடம் பெற்று சிங்களத்தில் "மினிசுன் அதர மினி ஹெக்" என்ற படத்தை தயாரித்து வெற்றி கண்டார். திரு. ரகுநாதன் எனது கதையை "மீண்டும் ஒரு பெண்" என்ற பெயரில் பாரிஸில் திரைப்படமாக தயாரித்து வெளியிட்டுள்ளார். அங்கு அதற்குப் பாராட்டுகள் கிட்டியுள்ளது.

கேள்வி:– இலங்கையில் எத்தனை தமிழ்த் திரைப்படங்கள் வெளிவந்துள்ளன?
பதில்:– இது வரை 29 படங்கள்.

கேள்வி:– தாங்கள் தமிழ் படங்களில் மட்டும் தான் நடித்திருக்கிறீர்களா?
பதில்:– இல்லை. சிங்கள படங்களிலும் – வேல்ட் ஸ்கை, பிளக் ஸ்போட் No.3, ஜங்கிள் புக் No.2 ஆகிய ஆங்கில படங்களிலும் நடித்திருக்கின்றேன்.

கேள்வி:– தொலைக்காட்சிகளில் ஏன் சிறந்த தமிழ் டெலி டிராமாக்கள் இடம் பெறுவதில்லை?
பதில்:– தமிழில் நல்ல கதைகளும், சிறந்த நடிகர்களும் இருந்த போதும் பொருளாதார ரீதியில் அப்படியான ஒரு டிராமாவை தயாரிக்க முதலீட்டாளர்கள் அல்லது நிறுவனங்கள் முன்வருவதில்லை. சிங்கள டெலி டிராமாக்களுக்கு பல வர்த்தக நிறுவனங்கள் முதலீடு செய்கின்றன. அதனால் அவைகளை வர்த்தக விளம்பர நிறுவனங்களே வெளியிடுகின்றன. தமிழ்த் துறைக்கு அப்படியில்லை. முழுநம்பிக்கையுடன் ஊக்கமளித்து தயாரிப்பதற்கு வசதிபடைத்த நிறுவனங்கள் முதலீட்டாளர்கள் முன்வருவதில்லை. இதன் காரணமாக நம் கலைஞர்களது படைப்புகள், திறமைகள் வெளிக்கொணருவதற்கான வாய்ப்புகள் இல்லை.

கேள்வி:– இந்தியத் திரைப்படத்துறையின் வளர்ச்சி இலங்கை திரைப்படத்துறையைப் பாதித்துள்ளதா?
பதில்:– அப்படி கூறிவிட முடியாது. இந்திய திரைப்படத்துறையில் திறமையை காட்டி வருபவர்கள் இலங்கையர்களே. குறிப்பாக பாலுமகேந்திரா போன்றவர்களைக் குறிப்பிடலாம். அதே வேளை இந்தியாவில் ஆரம்பகாலத்தில் தயாரிக்கப்பட்ட பத்தாவது திரைப்படத்தையும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட பத்தாவது தமிழ்த் திரைப்படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட படமே பலதுறைகளில் சிறந்த வளர்ச்சி கண்டிருப்பதை நாம் காணலாம்.

கேள்வி:– எதிர்காலத்தில் இலங்கையில் தமிழ் திரைப்படம் வளர்ச்சி பெறுமா?
பதில்:– நிச்சயமாக சிறந்த வளர்ச்சிக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு. இலக்கிய செய்தி மடலுக்கும் அதன் வாசக சகோதரர்களுக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். வளர்க கலை – வளர்க உங்கள் அன்பு.

**1976– இல் இலங்கையில் வெளியான
"பொன்மணி"**

## இலங்கைத் திரைப்படத்தில் இலக்கியப் படைப்பாளிகள்

எழுத்தாளர் காவலூர் இராசத்துரை கதை வசனத்தில் உருவான பொன்மணி திரைப்படம் அன்றே சாதி, மத வேறுபாடுகளை கருவாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. சில்லையூர் செல்வராஜன் – திருமதி கமலினி செல்வராஜன் ஆகியோர் பாடல்களை இயற்றியுள்ளனர். இப்படத்தில் கலாநிதி மௌன குரு, சித்திரலேக்கா மௌன குரு, டாக்டர் நந்தி, திருமதி சர்வ மங்களம் கைலாசபதி ஆகியோர்கள் நடித்துள்ளனர். 15–04–77ல் எழுத்தாளர் எச். எம். மொஹிதீன் தினகரனில் விமர்சனம் எழுதியுள்ளார். 24–04–77ல் இன்றைய பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தினகரனில் நீண்ட விமர்சனம் எழுதியுள்ளார். விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் "டெயிலிமிரர்", "தினகரன்" போன்ற பத்திரிகைகளில் விமர்சனம் எழுதியுள்ளார். இத்திரைப்படத்தைப் பற்றி 02–06–77ல் இன்றைய கலாநிதி எம். ஏ. நுஃமான் தினகரனில் விமர்சனம் எழுதியுள்ளார். பொன்மணி திரைப்படத்திற்கு இவ்வளவு விமர்சனம் கிடைத்தும் திரையிட்ட எல்லாத் தியேட்டர்களிலும எட்டுநாட்களோடு பெட்டியில் போய் அமர்ந்து விட்டது. இல்லை பெட்டியில் அமர்த்தப்பட்டது.

–நன்றி இலங்கையில் தமிழ் சினிமாவின் கதை–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல மனம் வாழ்க



நல்ல மனங்களை நாடு போற்றும், மக்கள் போற்றுவார்கள். எல்லோருக்கும் நல்ல மனம் இராது, கண்டி மண்ணிலே வாழும் நல்ல மனம் கொண்டவர்களில் ஹாஜியார் எச். எல். எம். நிஷாம் அவர்களும் ஒருவர். உடுநுவரையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் நீண்ட காலமாக கண்டியிலே வாழ்ந்து வருபவர். சாதாரண தொழிலாளியாக தன் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் படிப்படியாக தமது முயற்சியாலும் துணிவாலும் தன்னையும், தனது குடும்பத்தையும், சமூகத்தையும் வளர்த்துக் கொண்டவர். கண்டியில் தாராள மனப்பான்மையுடன் செயல்பட்டு அனைவரினதும் அன்பைப் பெற்றவர். எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஊக்கப்படுத்த, பத்திரிகையாளர்கள், சஞ்சிகைகள் வளர்ச்சிப் பெற துணையாக இருந்து வருபவர் இந்த நல் இதயம் படைத்த பெருமான். 50 முஸ்லீம் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு உறுதி பூண்டுள்ளார். அத்தோடு முஸ்லிம் வர்த்தகர் சங்கத்தின் தலைவராக அதன் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை தலைவராக இருந்து வருகின்றார். நாலாவது முறையாக ஏகமனதாக இச்சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நானூறு உறுப்பினர்களைக் கொண்ட இச்சங்கத்தை வழிநடாத்தும் ஒருவராக திகழ்கின்றார். மலையகத்தில் நல்ல மனங்கள் நல்ல இதயங்கள் உலகம் உள்ளளவும் மங்காமல் ஒளித்துக் கொண்டே இருக்கும் . நிஷாம் ஹாஜியார் பல்லாண்டு வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

## நல்ல மனம் வாழ்க



சமூகத் தொண்டராகவும், இலக்கியவாதிகளை, இலக்கிய ஆர்வலர்களை மதிக்கின்றவராகவும் திகழும் திரு. உசைர் எம். யூசுப் (Eng) CEng MICE (London) அவர்களை நானும், இக்பால் அலியும் அண்மையில் சந்தித்தோம். அவரிடம் எங்களை அறிமுகம் செய்த போது "நான் இலக்கியவாதிகளை மதிக்கின்றவன். எத்தனையோ வெளியீட்டு விழாக்களில் முதல் பிரதி வாங்கி எழுத்தாளர்களை கௌரவித்துள்ளேன் தொடர்ந்து கௌரவிப்பேன் என்றார்". "ப்ரிய நிலா" ஆசிரியர் உயன்வத்தை ரம்ஜான் பிறந்த உயன்வத்தை மண்ணில் தான் இவரும் பிறந்துள்ளார். ஆனால் நீண்ட காலமாக கண்டியிலே வாழ்ந்து வருகின்றார். வரைப்பட சிவில் பொறியியலாளராக லண்டனில் பட்டம் பெற்றவர். இவர் கண்டி பொது மருத்துவமனை அபிவிருத்தி செயற்குழு உறுப்பினராகவும், மாவனெல்ல தொழிற் பயிற்சி அதிகார சபை உறுப்பினராகவும் கண்டி மீரா மக்கம் பள்ளி வாசல் கட்டிட செயற்குழு உறுப்பினராகவும் இருந்து பல சமூகத் தொண்டுகளை ஆற்றி இருக்கின்றார். உயன்வத்தை நலன்புரிச் சங்கத் தலைவராக, ஸ்ரீலங்கா முஸ்லிம் நலன்புரி இயக்கம், சமூக அமைப்புகளிலும் தனது சேவையை செலுத்தியுள்ளார். அண்மையில் உயன்வத்தை ரம்ஜானின் சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில் அன்னாருக்கு பொன்னாடைப் போர்த்தி "சேவா ஜோதி" பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். இன்னும் பல சமூகப் பணிகளை ஆற்றி வரும் திரு. உசைர் எம். யூசுப் தொடர்ந்து பல சமூகப் பணிகளை ஆற்றி சமூகத்தில் நல்ல பெயரை பதித்து கொள்ள வாழ்த்துகிறோம்.

## நன்றி ! நன்றி !! நன்றி !!!

எமது தந்தையார் அமரர் கந்தர் கனகசபை அவர்களின் மரண செய்தியை "கண்டி இலக்கிய செய்தி மடல்" மூலம் அறிந்து நூற்றுக்கு மேற்பட்ட அஞ்சலி மடல்களை அனுப்பியவர்களுக்கும். நேரில் கவலை தெரிவித்தவர்களுக்கும் எனது சார்பிலும் எமது குடும்பத்தவர்கள் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி க. அருணாசலம் தமிழ்த்துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்

## எழுதாத வரலாறு
## கண்டியில் அறிமுக விழா

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பெ. முத்துலிங்கம் எழுதிய "எழுதாத வரலாறு" நூலின் அறிமுக விழா 23-01-97 போயா தினம் மாலை 3.30 மணிக்கு திருக்கோணமலை வீதியிலுள்ள சிட்டிமிஷன் மண்டபத்தில் திரு. க. ப. சிவம் தலைமையில் நடைபெறும்.

நூல் வெளியீட்டுரையை செல்வி மேனகா கந்தசாமி (அமைப்பாளர் மலையக மகளிர் சேவை) நிகழ்த்த ஆய்வுரைகளை கலாநிதி அம்பலவாணர் சிவராஜா, அசோகா வித்தியாலய அதிபர் திரு செ. நடராஜா, கவிஞர் சு. முரளிதரன் வழங்க ஏ. நெடுஞ்செழியன் சிறப்புரை நிகழ்த்துவார். அந்தனிஜீவா நன்றியுரை வழங்குவார்.


புத்தாண்டு பிறந்து விட்டது – ஆனால் எம் மக்கள் வாழ்வில் புத்தாண்டு விடிந்ததா? அடுத்த ஆண்டும் இதே நிலை தானா? பொங்கல் பொங்குவது போல இந்த ஆண்டும் எம் மக்களின் உள்ளமும் பொங்குதான் போகிறதா? விடிவே இல்லையா? இம்மக்களுக்கு வாழ்த்து கூறுவதை விட வேறு என்ன செய்வது?

**கே. சபாரத்தினம்,**

**ஸ்ருடியோ வேல்ஸ்**

**இல. 43 கம்பளை ரோட்**

**நாவலப்பிட்டிய**

**"துரைவி" பதிப்பகத்தோடு**

தொடர்பு கொள்ள

நிர்வாகி

இல 85, சரவணமுத்து மாவத்தை

கொழும்பு-13

மத்திய மாகாண

தமிழ் பாடசாலைகளுக்கிடையே நாடகப் போட்டி

பரிசு 15 ஆயிரம்

**விபரங்கட்கு**

**கொழுந்து**

(மலையக இலக்கியச் சஞ்சிகை)

ஜனவரி இதழைப் பாருங்கள்

விலை 15 ரூபாய்

**கிடைக்குமிடம்**

கலைவாணிப் புத்தகசாலை – கண்டி

கேசவன் புத்தக நிலையம் – அட்டன்

பூபாலசிங்கம் புத்தகசாலை – கொழும்பு

**வசந்தாஸ் ஜுவலர்ஸ்**

பவுன் புரோக்கர்ஸ் ஜுவலர்ஸ்

முப்பது வருடங்களுக்கு மேலாக தரமான தங்க நகைகளுக்கு புகழ் பெற்றவர்கள்

**56, டி. எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி.**

**தொலைபேசி: 08-233151, 224300**

**பெக்ஸ்: 233151, 232461**

எலிபன்ட் பப்படம்ஸ் கம்பனி பிரைவேட் லிமிட்

சுவைப்பதற்கு சுகமான

**யானை மார்க் பப்படம்**

**யானை மார்க் கறி சோயா**

**யானை மார்க் நூடில்ஸ்**

**யானை மார்க் நீலம்**

தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்

இல. 3 பி, நத்தரம்பொத்த குண்டசாலை

தொலைபேசி: 08-232446

பெக்ஸ்: 94-8-232446

*N. புவன்*



**லோர்ட்ஸ் வீடியோடிரோனிக்**

வீடியோ, நிழற்பட விசேடத்துனர்

34, கொட்டுகொடல்ல வீதி, கண்டி.

தொலைபேசி: 072 - 22327


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி பூரணவத்தை 18/13ச் சேர்ந்த இரா. அ. இராமன் ஆகிய என்னால் கண்டி டி. எஸ். சேனாநாயக்க வீதி, இல: 302. லகா இம்ப்ரஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.